**02.07.2026. O.S.No.1 of 2025 P.W.2 - Velu**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை**

நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் விவசாயம் செய்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம் வாதியின் வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டு அதில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் ஆமாம். தேவராஜ் என் உறவினர் ஆவார். பிரதிவாதி புன்னியகோட்டியை தெரியும். நான் பிரமாண வாக்குமூலத்தில் ரூ.8,00,000 வாதியிடமிருந்து பிரதிவாதி வாங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

அவர் எப்போது கேட்டார் நான் எப்போது பணம் வாங்கி கொடுத்தேன் என்றால் பணம் கொடுப்பதற்கு 1 மாதத்திற்கு முன்பு கேட்டார். அதன் பிறகு நான் பணம் வாங்கி கொடுத்தேன். தேதி சரியாக நினைவில்லை. பேர்ணாம்பட்டு, சார் பதிவாளர் அலுவலகத்திற்கு முன்பு பணம் வாங்கி கொடுத்தேன்.

நான் பணம் கொடுக்கும் போது யார் எல்லாம் இருந்தார்கள் என்றால் புன்னியகோட்டி, நான், தேவராஜ் மற்றும் புன்னியகோட்டியின் மகன் ஆகியோர்கள் இருந்தோம். ரூ.8,00,000 பணத்திற்கு வெறும் பாண்டு தான் எழுதி கொடுத்தாரா என்றால் தலா ரூ.4,00,000 வீதம் 2 பாண்டுகள் எழுதி கொடுத்தார். பணமாக கொடுத்தாரா இல்லை காசோலையாக கொடுத்தாரா என்றால் பணமாக கொடுத்தார்.

ரூ.8,00,000 பணத்தை உடனடியாக கொடுக்கும் அளவிற்கு வாதிக்கு வசதி உள்ளதா என்றால் வாதி அரசாங்கத்தில் பணி செய்து

ஓய்வு பெற்றவர். அவர் பணி ஓய்வு பணம் வைத்திருந்தார். அந்த விவரத்தை நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

ரூ.4,00,000 க்கான பாண்டு கையால் எழுதியதா என்றால் டைப் செய்து கொடுத்தார். ரூ.4,00,000 க்கான பாண்டை பதிவு செய்து கொடுத்தார்களா என்றால் பதிவு செய்யவில்லை. ரூ.2,00,000 க்கு அடமான பத்திரம் எழுதி கொடுத்ததற்கு பதிவு செய்தார்கள். இந்த வழக்கு பாண்டுகள் இரண்டும் பதிவு செய்யவில்லை.

யார் பாண்டை தட்டச்சு செய்தார்கள் என்று அந்த ஆவணத்தில் எழுதப்பட்டுள்ளதா என்றால் பாண்டில் எழுதவில்லை. நான் என் பிரமாண வாக்குமூலத்தில் எழுதி கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் ஆம், பாண்டு எழுதி கொடுத்ததாக சொல்லியுள்ளேன்.

என்னிடம் காண்பிக்கப்படும் பாண்டில் உள்ள கையொப்பம் எது என்னுடையது என்று சாட்சியிடம் ஆவணம் காண்பிக்கப்பட்டு கேட்கப்பட்டது, சாட்சி பார்த்துவிட்டு என்னுடைய கையொப்பம் இது தான் என்று அடையாளம் காட்டி சாட்சியம் அளிக்கிறார்.

நான் எத்தனையாவது சாட்சியாக கையொப்பம் போட்டேன் என்றால் 1வது சாட்சியாக கையொப்பம் செய்தேன். ரூ.2,00,000 பணத்திற்காக அடமானம் போட்டதாக சொல்லும் நான் எதை அடமானம் போட்டார் என்றால் பிளாட்டை அடமானம் போட்டார்.

பாண்டு தட்டச்சு செய்தவதற்கு முன்பு காலியாக இருந்தபோது கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. புன்னியகோட்டி காலியாக இருக்கும்போது தான் கையொப்பம் செய்தார் என்றால் இல்லை.

தட்டச்சு செய்த பின்னர் தான் அவரும் நானும் கையொப்பம் செய்தோம்.

நான் வாதியின் உறவினர் என்பதால் வாதிக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ரூ.2,00,000 தான் வாதியிடமிருந்து பிரதிவாதி கடன் வாங்கினார் என்றும் அதற்காக சொத்தை அடமானம் போட்டு கொடுத்தார் என்றும் நான் சொல்வது போல் ரூ.8,00,000 பிரதிவாதி வாங்கவில்லை என்றும் அதற்காக தாவா பாண்டு எழுதி கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

நான் வாங்கி கொடுத்தது வெறும் ரூ.2,00,000 மட்டும் தான் என்றால் சரியல்ல. ரூ.8,00,000 வாங்கி கொடுத்ததாக சொல்லும் நான் தலா ரூ.4,00,000 க்கு 2 பாண்டு எழுத வேண்டிய அவசியம் என்ன என்றால் தலா ரூ.4,00,000 க்கு 2 பாண்டுகள் எழுதி வைத்திருந்தார்கள், நான் கையொப்பம் செய்தேன்.

வாதி என் உறவினர் என்பதால் அவருக்காக வேண்டி நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடியாகத்தக்கது என்றால் சரியல்ல.

ELAVARASAN
Digitally signed by ELAVARASAN
Date: 2026.07.02 16:55:34 +0530